**பிப்ரவரி – 03**

# TNPSC துளிகள்

- நான்கு மடங்களின் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக என்று நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும் தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் (HR&CE) முடிவுக்கு எதிராக நித்யானந்தா தாக்கல் செய்த ஒரு நீதிப் பேராணை மேல்முறையீட்டினை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.
- சென்னை மாநகராட்சி (GCC) பிராந்தியத்தின் செல்லப் பிராணிகளை வளர்ப்பவர்கள் அவர்களின் செல்லப்பிராணிகளுக்கு நுண்சில்லுகளைப் பொறுத்துவதைக் கட்டாயம் ஆக்குவதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.
- இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) ஆனது, சென்னை-பெங்களூரு நெடுஞ்சாலையில் அவசர அழைப்புகளை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட “Save Our Souls” (SOS) பெட்டிகளின் புதுப்பிக்கப்பட்ட பெட்டிகளை அமைக்கத் தொடங்கி உள்ளது.
- வேலூர் மாவட்டத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் சுத்திகரிக்கப்படாத அல்லது பகுதியளவு சுத்திகரிக்கப்பட்டக் கழிவுநீரை பாலாற்றில் வெளியேற்றியதன் மூலம் “நீர்நிலைகள், நிலத்தடி நீர் மற்றும் வேளாண் நிலங்களுக்கு மீளமுடியாத ஒரு சேதத்தை” ஏற்படுத்தியுள்ளன என்று உச்ச நீதிமன்றமானது தீர்ப்பளித்து, அதற்கான இழப்பீடுகளை வழங்குமாறு மாநில அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.
- பிர்லா மேலாண்மைத் தொழில்நுட்ப நிறுவனம் (BIMTECH) ஆனது, ‘BIMCOIN’ எனப்படும் இந்தியாவின் முதலாவது உள்வளாகப் பயன்பாட்டுத் தொடர் சங்கிலி தொழில்நுட்பம் சார்ந்த நாணயத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கட்ச் மாவட்டத்தில் உள்ள குணேரி கிராமத்தின் 32.78 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட, கடல் பகுதி சாராத நிலத்தில் அமைந்த இயற்கையான சதுப்புநிலக் காடுகள் நிறைந்த பகுதியானது, குஜராத் மாநிலத்தின் முதல் பல்லுயிர்ப்பெருக்கப் பாரம்பரியத் தளமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு நடவடிக்கை உச்சிமாநாட்டில் வெளியிடப் பட்ட முதல் தற்சார்பு சர்வதேச செயற்கை நுண்ணறிவுப் பாதுகாப்பு என்ற அறிக்கையானது, செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு மீதான மதிப்பீட்டிற்கான புதிய உலகளாவியத் தரத்தினை அமைத்துள்ளது.
- டெல்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, பெங்களூரு மற்றும் ஐதராபாத் ஆகிய ஆறு முக்கியப் பெருநகரங்களில் மனிதக் கழிவகற்றல் தொழிலாளர் மற்றும் கழிவுநீர்த் தொட்டி சுத்திகரிப்புத் தொழிலாளர் முறைகளை முழுமையாகத் தடை செய்ய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


# தமிழ்நாடு செய்திகள்

## மத்திய வரிகளில் தமிழ்நாட்டிற்கான பங்கு - 2025

- 2025-2026 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையின் படி, மத்திய வரிகளில் தமிழ்நாடு மாநிலமானது அதிகப் பங்குகளைப் பெற உள்ளது.
- 15வது நிதி ஆணையத்தினால் பரிந்துரைக்கப்பட்ட படி, மத்திய வரிகளில் தமிழ்நாடு மாநிலத்தின் பங்கு 4.079% ஆகும்.
- ஆரம்ப மதிப்பீடுகளில் 50,873.76 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்ட மத்திய வரிகளில் இந்த மாநிலத்திற்கான பங்கானது, 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மத்திய

நிதிநிலை அறிக்கை மதிப்பீடுகளில், சுமார் 52,491.88 கோடி ரூபாயாக அதிகரிக்கப் பட்டு உள்ளது.

- 2025-2026 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் மத்திய வரிகளில் தமிழ்நாட்டின் பங்கு 58,021.50 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2023-2024 ஆம் ஆண்டு முதல் மாநிலங்களுக்கு 3% நிதிப் பற்றாக்குறையானது (மொத்த வரவுகளுக்கும் மொத்த செலவினங்களுக்கும் இடையிலான வேறுபாடு) வரம்பானது அனுமதிக்கப் பட்டது.
- மின்சாரத் துறைச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதற்காக 2021-22 முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை நான்கு ஆண்டுகளுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 0.5% கூடுதலாகக் கடன் வாங்க அனுமதிக்கப்பட்டது.




## நெல் கொள்முதல் – தமிழ்நாடு

Purchase trend

The participation of players in paddy procurement in Tamil Nadu (in tonnes)

| Agency | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22* | 2022-23** |
|---|---|---|---|---|---|---|---|
| NCCF | 559 (DPC:4) | 27,195 | 18,446 (DPC: 7) | 89,850 | 1,49,198 (DPC:7) | 71 (DPC:4) | 34,479 (DPC:91) |
| TNCSC & others | 2,11,116 (DPC:655) | 14,66,175 (DPC:1,447) | 18,92,219 (DPC:1,759) | 31,51,140 (DPC:2,135) | 43,41,024 (DPC:2,724) | 43,28,185 (DPC:2,928) | 3,00,870 (DPC:811) |
| TOTAL | 2,11,675 (DPC:659) | 14,93,370 (DPC:1,447) | 19,10,665 (DPC:1,766) | 32,40,990 (DPC:2,135) | 44,90,222 (DPC:2,731) | 43,28,256 (DPC:2,932) | 3,35,349 (DPC:902) |

NCCF: National Cooperative Consumers' Federation, TNCSC: Tamil Nadu Civil Supplies Corporation, DPC: Direct Purchase Centres | Figures given in brackets refer to the number of Direct Purchase Centres opened in the years concerned

*Up to August 31, 2022 | ** As on October 1, 2022




The National Cooperative Consumers' Federation has been making a gradual progress in paddy procurement in the State

- பொது விநியோக அதிகாரிகள் தமிழக விவசாயிகளிடமிருந்து சுமார் எட்டு லட்சம் டன் நெல் கொள்முதல் செய்துள்ளனர்.
- கொள்முதல் செய்யப்பட்ட நெல்லில், சுமார் 6.2 லட்சம் டன் என்ற அளவிலான பெரும் பகுதி காவிரி டெல்டா மாவட்டங்களின் பங்காகும்.

- தஞ்சாவூர் சுமார் இரண்டு லட்சம் டன் பங்குடன் முன்னணியில் உள்ளது.
- தஞ்சாவூருக்கு அடுத்தபடியாக தோராயமாக 1.6 லட்சம் டன்கள் பங்குடன் திருவாரூர் இடம் பெற்றுள்ளது; 85,400 டன்கள் பங்குடன் மயிலாடுதுறையும் மற்றும் 70,500 டன்கள் பங்குடன் கடலூரும் அடுத்து இடம் பெற்றுள்ளன.
- காவிரி டெல்டா அல்லாத மாவட்டங்களைப் பொறுத்தவரையில், செங்கல்பட்டு சுமார் 36,000 டன்கள்; ஈரோடு, 31,000 டன்கள்; மற்றும் திருவள்ளூர், 23,300 டன்கள் என்ற அளவுப் பங்குடன் முன்னணியில் உள்ளன.
- மேற்குறிப்பிட்ட மாவட்டங்களின் குழு மட்டும் 1.67 லட்சம் டன்களை வழங்கியுள்ளது.

## NGT – மீன்பிடியின் போது ஆமைகள் தப்பிக்க உதவும் சாதனங்கள்




- சென்னை மற்றும் செங்கல்பட்டு கடற்கரைகளில் ஆலிவ் ரெட்லி ஆமைகள் / சிற்றாமைகள் மிகவும் அதிக எண்ணிக்கையில் உயிரிழந்ததைத் தொடர்ந்து தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தின் (NGT) தெற்கு அமர்வு ஆனது தானாக முன்வந்து வழக்கை விசாரிக்கத் தொடங்கியது.
- மீன்பிடிப்பின்ன் போது மீன்பிடி வலைகளில் ஆமைகள் தப்பிக்க வழி வகை செய்யும் சாதனங்கள் (TEDs) எதுவும் கிடைக்கப் பெறாததால் அவற்றைப் பயன்படுத்துவதை அமல்படுத்துவது தற்போது சாத்தியமில்லை என்று தமிழ்நாடு மீன்வளத் துறை அந்த அமர்வுக்குத் தெரிவித்துள்ளது.
- ஆமைகளின் இறந்த உடல்கள் ஆந்திரப் பிரதேச மாநிலக் கடற்கரையிலிருந்து மிதந்து வந்திருக்கலாம் என்றும் ஊகிக்கப்பட்டது.
- இதனைத் தெளிவுபடுத்துவதற்கு, மீன்வளத் துறை மற்றும் ஆந்திரப் பிரதேச முதன்மை தலைமை வன வளங்காப்பாளர் ஆகியோர் தங்கள் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு ஐந்த அமர்வு உத்தரவிட்டது.
- 2015 ஆம் ஆண்டின் ஒரு அரசாணையானது, நவம்பர் முதல் ஏப்ரல் மாதம் வரையிலான ஆமைகளின் வலையமைக்கும் காலத்தில் அனைத்து இழுவை வலைகளிலும் TED

சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது.

- கூடுதலாக, 2016 ஆம் ஆண்டு அரசாணையானது தமிழ்நாட்டில் ஆமைகளின் இனப் பெருக்க காலத்தில் அவை வலையமைக்கும் இடங்களிலிருந்து சுமார் ஐந்து கடல் மைல்களுக்குள் மீன்பிடிப்பதற்கு இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடி படகுகள் மற்றும் விசையாழிகள் பொருத்தப்பட்ட படகுகளைப் பயன்படுத்துவதைத் தடை செய்தது.


# தேசியச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சங்கள்

- வரிவிதிப்பு, நகர்ப்புற மேம்பாடு, சுரங்கம், நிதித்துறை, மின்சாரம் மற்றும் ஒழுங்கு முறைச் சீர்திருத்தங்கள் என ஆறு துறைகளில் இந்த நிதிநிலை அறிக்கையானது சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் சுமார் 50,65,345 கோடி ரூபாய் செலவினம் திட்டமிடப்பட்டுள்ளது, இது நடப்பு நிதியாண்டு செலவினத்தினை விட 7.4% அதிகமாகும்.
- 2024-25 ஆம் ஆண்டிற்கான செலவினம் (திருத்தப்பட்ட மதிப்பீடுகள்) 47.16 லட்சம் கோடி ரூபாயாகும்.
- 2024-25 ஆம் ஆண்டிற்கான நிதிப் பற்றாக்குறையின் திருத்தப்பட்ட மதிப்பீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.8 சதவீதமாகும்.
- 2025-26 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மதிப்பீடுகளானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.4 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இனி புதிய வரிவிதிப்பு முறையில் 12 லட்சம் ரூபாய் வரையிலான வருமானத்திற்கு வருமான வரி இல்லை.
- புதிய வரிவிதிப்பு முறையில் 75,000 ரூபாய் என்ற நிலையான தொகைக் குறைப்புடன் 12.75 லட்சம் ரூபாய் வரையிலான வருமானத்திற்கு வருமான வரி செலுத்த வேண்டி இருக்காது.
- நிதிநிலை அறிக்கையில் வளர்ந்து வரும் வேளாண் மாவட்டங்களுக்கான பிரதான் மந்திரி தான் தன்ய கிரிஷி யோஜனா அறிவிக்கப்பட்டது.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களுக்கான ஒரு முதலீட்டு வரம்பு வகைப்பாடு ஆனது 2.5 மடங்கு அதிகரிக்கப்படும்.
- பீகாரில் புதிய மக்கானா (தாமரை விதை) வாரியம், தேசிய உணவுத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், தொழில்முனைவோர் மற்றும் மேலாண்மை நிறுவனம் ஆகியவை நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டன.
- முதல் முறையாக தொழில்முனைவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பட்டியலிடப் பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடபட்ட பழங்குடியினர் பிரிவினைச் சேர்ந்த 5 லட்சம் பெண்களுக்காக ஒரு புதியத் திட்டம் தொடங்கப்படும்.
- பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனாவின் கீழ் இணையவழியில் திரட்டப்படும் தொழிலாளர்களுக்கு சுகாதார நல சேவைகள் வழங்கப்படும்.
- அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பை வழங்குவதை ஒரு நோக்கமாகக் கொண்ட ஜல் ஜீவன் திட்டமானது 2028 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.
- சுமார் 36 உயிர்காக்கும் மருந்துகளுக்குத் தற்போது சுங்க வரியிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்படும்.

- அடுத்த ஐந்து ஆண்டுகளில் அரசுப் பள்ளிகளில் சுமார் 50,000 அடல் மேம்படுத்தும் ஆய்வகங்கள் அமைக்கப்படும்.
- இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாக அடுத்த தலைமுறை நுட்பம் சார்ந்த புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கு வேண்டி மிக மேம்பட்ட தொழில்நுட்ப நிதிகளைப் பயன்படுத்துவது குறித்தும் பரிசீலிக்கப்படும்.
- பள்ளி மற்றும் உயர்கல்விக்கு எண்ணிம வடிவிலான இந்திய மொழிப் புத்தகங்களை வழங்குவதற்கு பாரதிய பாஷா புஸ்தக் திட்டம் அறிவிக்கப்படும்.




## தற்காலிக நீதிபதிகள் குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு




- நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளின் தேக்கத்தை நீக்குவதற்காக வேண்டி உயர் நீதிமன்றங்களில் தற்காலிக நீதிபதிகளை நியமிக்க வேண்டும் என்ற அதன் முந்தைய நிபந்தனையை உச்ச நீதிமன்றம் தளர்த்தியுள்ளது.

- "ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் 10 சதவீதத்திற்கு மிகாமல் இரண்டு முதல் ஐந்து வரையிலான தற்காலிக நீதிபதிகளை நியமிப்பதற்கு 224Aவது சரத்தினைப் பயன்படுத்தி தற்காலிக நீதிபதிகளை நியமிக்கலாம்" என்று உச்ச நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டது.
- 224Aவது சரத்தானது, உயர் நீதிமன்றங்களின் அமர்வுகளில் ஓய்வு பெற்ற நீதிபதிகளை நியமிப்பது தொடர்பானதாகும்.
- எந்தவொரு மாநிலத்தின் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியும் குடியரசுத் தலைவரின் முன் அனுமதியுடன், அந்த நீதிமன்றத்தின் அல்லது வேறு எந்த உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பதவி வகித்த எந்தவொரு நபரையும் அந்த மாநிலத்திற்கான ஒரு உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக செயல்படுமாறு கோரலாம்.
- அவ்வாறு கோரப்படும் ஒவ்வொரு நபரும், அத்தகைய பணியாற்றும் போது, குடியரசுத் தலைவரின் உத்தரவின் பேரில் தீர்மானிக்கக் கூடிய சில கொடுப்பனவுகளுக்கான ஒரு உரிமையினைப் பெறுவார்.
- மேலும் அவர் அனைத்து அதிகார வரம்பு, அதிகாரங்கள் மற்றும் சலுகைகளையும் அவர் பெறுவார், ஆனால் அந்த உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகக் கருதப்படமாட்டார்.

## திறன்சார் தொழிலாளர் பற்றாக்குறை குறியீடு




- தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் ஆனது திறன்சார் தொழிலாளர்ப் பற்றாக்குறைக் குறியீட்டினை (OSI) அறிமுகப்படுத்தியுள்ளது.
- OSI என்பது, திறன் சார் தொழிலாளர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் தொழில்கள் குறித்தத் தரவு சார்ந்தத் தகவல்களை வழங்கும் என்பதோடு வேலை தேடுபவர்களின் திறன்களை தொழில்துறை தேவைகளுடன் ஒருங்கிணைக்கவும் இது உதவும்.
- கூடுதலாக, இந்த அமைச்சகம் ஆனது பன்மொழி சார்ந்த e-Shram சிறிய இணைய தளம் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- E-Shram சிறிய இணைய தளங்களானது தேசிய e-Shram தரவுத் தளத்துடன் மிக நன்கு ஒருங்கிணைக்கப் பட்ட மாநில வாரியான எண்ணிமத் தளங்கள் ஆகும்.

- அவை முறைசாராத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வாய்ப்புகள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களுடன் சேர்த்து மத்திய மற்றும் மாநில நலத் திட்டங்களை அணுகுவதற்கான ஒற்றைத் தீர்வினை வழங்குகின்றன.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## சுபன்ஷு சுக்லா




- சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS) பயணிக்க உள்ள முதல் இந்திய விண்வெளி வீரர் என்ற பெருமையை அணித் தலைவர் சுபன்ஷு சுக்லா பெற உள்ளார்.
- நாசாவின் எதிர்கால ஆக்ஸியம் திட்டம் 4 என்ற ஆக்ஸியம் ஸ்பேஸ் திட்டத்தினை இயக்குவதற்காக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்தத் திட்டம் மூலம் சுக்லா, போலந்தைச் சேர்ந்த ஸ்லாவோஸ் உஸ்னான்ஸ்கி-விஸ்னீவ்ஸ்கி, ஹங்கேரியைச் சேர்ந்த திபோர் கபு, அமெரிக்காவைச் சேர்ந்த பெக்கி விட்சன் ஆகிய நான்கு விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.
- இந்த விண்வெளி வீரர்கள் 14 நாட்கள் அந்த நிலையத்தில் தங்குவார்கள்.

# முக்கிய தினங்கள்

## உலக ஈரநில தினம் 2025

- இத்தினமானது 1971 ஆம் ஆண்டு சர்வதேச ஒப்பந்தமாக ஏற்றுக் கொள்ளப் பட்ட ஈர நிலங்கள் தொடர்பான உடன்படிக்கையின் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- பூமியின் நிலப்பரப்பில் சுமார் 6% மட்டுமே ஈரநிலங்கள் இருந்தாலும், அனைத்து தாவர மற்றும் விலங்கு இனங்களில் சுமார் 40% ஆனது ஈரநிலங்களில் வாழ்கின்றன அல்லது இனப்பெருக்கம் செய்கின்றன.
- 1700 ஆம் ஆண்டுகளில் இருந்து உலகின் சுமார் 90% ஈரநிலங்கள் சீரழிந்து விட்டன, மேலும் புவியில் காடுகளை விட மூன்று மடங்கு மிக வேகமாக ஈரநிலங்கள் இழந்து வருகின்றன.

- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Protecting Wetlands for Our Common Future" என்பதாகும்.




# இதரச் செய்திகள்

## தேசிய சாலைப் பாதுகாப்பு மாதம் 2025




- அனைவருக்கும் பாதுகாப்பான சாலைகள் என்ற கருத்தினைப் பரப்புவதற்காக 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 முதல் 31 ஆம் தேதி வரையில் தேசிய சாலைப் பாதுகாப்பு மாதம் அனுசரிக்கப்படுகிறது.
- பல்வேறு நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள் மூலம் அனைத்து பங்குதாரர்கள், குடி மக்கள் மற்றும் இளையோர்களையும் நன்கு ஒன்றிணைப்பதை இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகளாவியச் சாலை விபத்துகளில் 11% மற்றும் உலகளாவிய உயிரிழப்புகளில் 10% இந்தியாவில் தான் நிகழ்கிறது.
- உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் அதிக எண்ணிக்கையிலான சாலை விபத்துகள் மற்றும் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "சடக் சுரக்சா - ஜீவன் ரக்சா" என்பதாகும்.

## 30 கல்வெட்டுகளின் கண்டுபிடிப்பு – கர்நாடகா

- சுமார் 30 கல்வெட்டுகளின் கண்டுபிடிப்பு ஆனது உடுப்பி மாவட்டத்தின் கர்கலா தாலுக்காவின் அப்பன பெட்டு பசாதியின் மீது கவனத்தை ஈர்த்துள்ளது.
- அவற்றில், 29 கன்னட எழுத்து வடிவிலும், ஒன்று நாகரி எழுத்து வடிவிலும் உள்ளன என்ற நிலையில் இவை தீர்த்தங்கரரின் பெயரை மட்டுமே கொண்டுள்ளன.
- இந்த 16 வரி கொண்ட கல்வெட்டில், சாளுவ பைரராசரின் மனைவி இலட்சுமணாதேவி 24 தீர்த்தங்கரர்களின் பட்டியலை உருவாக்கி அதை பசாதிக்கு வழங்கியதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- கி.பி.1586 ஆம் ஆண்டு மார்ச் 25 என்ற தேதியிட்ட முற்காலக் கல்வெட்டு ஆனது, சாளுவ பைரராசரின் (இரண்டாம் பைரராசர்) சகாப்தத்தைச் சேர்ந்தது.
- அவர் சுமார் 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கலச-கர்கல சமண வம்சத்தின் ஒரு ஆட்சியாளராக இருந்தார்.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★